Raya




# சிறுவர் மலர்

## மலர் 2

RAYA
87 RUE DE COLOMBES
92600 A..NIE... SUR -
- SEINE , FRANCE




வால்ற் டிஸ்னி
மிக்
காட்டிக்கொடுத்தல்.
என் கை அழுக்கானதை மாமா பார்ப்பதற்கு முன் கையை கழுவிடணும்.
குளிச்சைக் காணோமே...

# நோக்கு

இன்று டென்மார்க்கில் எத்தனையோ ஆசிரியர்கள், பெற்றார்கள், சங்கங்கள் தமிழ்க்குழந்தைகளுக்கு தமிழ் கல்வியினை கற்பிப்பதற்கான பாடத்திட்டத்தை உருவாக்க ஆரம்பித்துள்ள இவ்வேளையில், சஞ்சீவியும் தன்னால் இயன்ற அளவிற்கு தமிழ்ச் சிறார்களுக்காக இம் மலரினை வெளியிடுவதில், குறைந்த விதமாவது தனது பங்கினைச் செலுத்துகின்றது என நினைக்கின்றோம்.

இவ்வாறு எண்ணும் எமது எண்ணத்தைப் பூர்த்தி செய்வதற்கு, பெற்றோர்களாகிய உங்களது உதவி இன்றியமையாதது.


சில ஆர்வமுள்ள பெற்றோர்களின் முன் முயற்சியால், சில சிறார்கள் தமது சொந்த ஆக்கங்களை சஞ்சீவியின் சிறுவர் மலருக்கு அனுப்பிவைத்துள்ளார்கள். இம்முறை ஆர்வங்காட்டிய பெற்றோர்கள், தமது தமிழ் குடும்ப நண்பர்கள் மத்தியில் இம்மலரினை அறிமுகம் செய்யும் பொறுப்பை ஏற்றும், உணர்ந்தும் சிறுவர் மலரின் வளர்ச்சிக்கு உதவுமாறும் வேண்டிக் கொள்கிறோம்.


மேலும் தற்போது டென்மார்க்கில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் உங்களது பாடசாலைகளின், மாணவச் சிறார்களினது சொந்த ஆக்கங்களைச் சேகரித்து எமக்கு விரைவாக அனுப்பிவைத்து உதவிபுரியுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.


-நன்றி-

"சஞ்சீவி"

இங்கு உள்ள படங்களிற்கான தமிழ்ச்சொற்களைத் - தெரிந்து எழுதுங்கள்.











grønsager







ged



brandbil



bil



skib

# குதிரைகளும் நாயும்

- முரளிமாமா -



"NISSUM" நிசும் -

என்ற ஒரு அழகான கிராமம். அந்தக்கிராமத்திலே ஈவன் (EVAN) என்றொரு விவசாயி வாழ்ந்து வந்தான். அவனது வீட்டில் ஒரு தாய்க்குதிரையும், ஒரு தகப்பன் குதிரையும், ஒரு குட்டிக்குதிரையும் வாழ்ந்து வந்தன.

நல்ல வெய்யிற் காலம், ஈவன் தனது குதிரைகளை புல் மேய்வதற்காக பக்கத்து வயல்வெளிக்குள் விடுவது வழக்கம். குதிரைகளும் புல் மேய்ந்துவிட்டு மாலை நேரமானதும் வீட்டுக்கு வந்து சேரும். இது ஒவ்வொரு நாளும் நடைபெறும் சம்பவம்.

வழமைபோல் ஒரு நாள் இந்தக் குதிரைகள் மேய்ந்து கொண்டிருக்கும் போது தாய்க் குதிரையானது அருகிலுள்ள பக்கத்து வயலில் மேயப் புகுந்தது. உடனே திடீரென்று அந்த வீட்டு நாய் ஓடிவந்து வள் வள் என்று குரைக்கத் தொடங்கியவுடன் தாய்க்குதிரை வேகமாக ஓடிவந்து இழைத்துக் கொண்டது.

உடனே தகப்பன் குதிரை தாய்க் குதிரையைப் பார்த்து ஆறுதல் சொன்னது. நீ கவலைப்படாதே நானும் எத்தனையோ முறை முயற்சித்திருக்கிறேன் முடியாமல் இருக்கிறது. எங்களுக்குத்தான் கடவுள் கொம்பு தரவில்லையே என்ன செய்வது எங்களுடைய நிலை இவ்வளவுதான் என ஆறுதல்படுத்தியது.

தாய்க்குதிரையும் தங்கள் நிலையை உணர்ந்து தலையாட்டிவிட்டு அவர்களோடு சேர்ந்து மேய்ந்தது.

தாயும், தந்தையும் கதைத்தவற்றை கேட்டதும் கேளாதது போல் குட்டிக்குதிரை மேய்ந்துகொண்டிருந்தது. அப்படியே அன்றைய பொழுது போய்விட்டது.

மறுநாளும் வழமைபோல் குதிரைகள் வெளியே திறந்து விடப்பட்டன.

"ஏன் நான் போய் அங்கே மேயக்கூடாது" என்ற எண்ணம் குட்டிக்குதிரையின் மனத்தில் உறுத்தியது"

ஏதோ திடீரென தோன்றிய யோசனையில் குட்டிக்குதிரை வயலின் பக்கத்துக் கரைக்கு மெல்ல,மெல்ல நடந்து போனது. இதைக் கண்ட நாய் வள்.. வள்.. எனக் குரைத்துக் கொண்டு பாய்ந்து வந்தது. உடனே குட்டிக் குதிரை ஓடி வந்து தாய்தந்தையுடன் ஒட்டிக்கொண்டது.

மகனே நானும் உனது அப்பாவும் மட்டுமல்ல எங்களுக்கு முதல் இருந்த எனது அப்பா அம்மா கூட எத்தனையோ முறை முயற்சித்தனர். ஆனால் நாய் விடுவதாக இல்லை. நீ பேசாமல் இங்கேயே இரு என குட்டிக் குதிரைக்கு அறிவுரை சொன்னது.

குட்டிக்குதிரை சிறிது நேரம் யோசித்தது.

அம்மா, நாய் புல்லுத்தின்னுமா என குதிரைக்குட்டி கேட்டது.

நாயினம் புல்லுத்தின்னுவதில்லை என தாய் சொன்னது.

அப்ப ஏன் அது எங்களை புல்லைத் தின்ன விடாதாம்.

அது தான் நாயின் இந்தக் குணம்.

தாயும், தந்தையும் ஒருமித்து இந்தப் பதிலை கூறினார்கள்.


அம்மா நாங்கள் தனித்தனியே போவதால் நாய் எங்களை எதிர்க்க வருகிறது. நாங்கள் மூவரும் ஒன்றாய்ப் போவோம், அது குரைத்துக் கொண்டு வந்தாலும் எதிர்த்து நிற்போம். பின்பு என்ன நடக்கிறது எனப் பார்ப்போம். நீங்கள் சொன்னது போல் கடவுள் எங்களுக்குத் தலையில் கொம்பைத் தரவில்லைதான். ஆனால் அதே கடவுள் மூளையையும் நாலு கால்களையும் தந்திருக்கிறார் தானே. முடியுமான வரை முயற்சித்துப் பார்ப்போம், என குட்டிக் குதிரை அறிவுரைகளை அள்ளி வீசியது.


உடனே மூவரும் ஒருமித்து வயலின் பக்கத்துக் கரைக்கு சென்றார்கள். திடீரென நாய் குரைத்துக் கொண்டு வந்தது. மூவரும் பின்வாங்காமல் முன்னங் கால்களை உயர்த்தின. குதிரைகளின் எதிர்ப்பை எதிர்பார்க்காத நாய் கொஞ்சம் கொஞ்சமாய்க் குரைப்பதை நிறுத்திக் கொண்டு பின்வாங்கி ஓடியது.

மூவரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்து மகிழ்ந்து கொண்டு அந்த பசுமையான வயலை மேய்ந்து மெள்ளத் தொடங்கின.

(முற்றுப்பெற்றது)


படங்களைப் பார்த்து, சரியான சொல்லைத் தெரிவுசெய்து கட்டங்களை நிரப்புங்கள்.







## யார் யார் எந்த விளையாட்டுப் பொருட்களை பயன் படுத்துகிறார்கள்?

றிப், றாப், றூப் என்னும் மூன்று வாத்துக்குஞ்சுகள் அவர்களுக்கு ஏற்ற அசைவுகளில் நிற்கிறார்கள். அதிலிருந்து நீங்கள் சுலபமாக கண்டுபிடிக்கலாம், எந்த பொருட்களை இவர்கள் பயன் படுத்துகிறார்கள் என்பதை!




AfRIKA
Bank of England one pound
A24 1724
Jama



# உங்கள் திறமைக்கு

## ஒரு வினா
## ஒரு பரிசு

ராமு என்பவன் ஒரு சுட்டிப்பயல் அவன் ஒரு நாள் தூக்கத்தில் கிடக்கும் போது ஒரு கனவு கண்டான். தானும், தனது "பப்பி" என்ற நாய்க்குட்டியும். சேர்ந்து படகு ஒன்றில் பிரயாணம் செய்வதாகவும், படகு நடுக்கடலுக்கு போய்க் கொண்டிருக்கும் போது திடீரென திமிங்கிலம் என்ற இராட்சத மீன் ஒன்று அந்தப் படகை துரத்தி வருவதாகவும் அந்த மீன் படகுக்கு அருகில் வந்து படகுடன் ராமுவையும், பப்பியையும் விழுங்கப் போகிறது. பெரிய கடல் தப்புவதற்கு வேறு வழியே இல்லை. இந்த பயங்கரமான நிலையில் ராமுவும், பப்பியும் உயிர் தப்ப ராமு என்ன செய்திருப்பான்?

| | |
|---|---|
| அப்பாவும் | கண்கள் |
| எங்கள் | இரண்டு |
| எங்களது | |
| அம்மாவும் | |

சிறுவர்களே ! இங்கே சதுரங்களுள் ஒழுங்கின்றிக் கிடக்கும் சொற்களை சரியாக இணைத்தால் வாக்கியம் ஒன்று அமையும். சரியான வாக்கியத்தினை எழுதி அனுப்புங்கள்

உங்கள் திறமைக்கு என்ற சிறுவர் பகுதிக்கு இவ்விரு வினாவுக்கும் சரியாக விடைதரும் சிறுவன் அல்லது சிறுமிக்கு சஞ்சீவி சார்பில் பாரும்மினை-ச் (FARUM) சேர்ந்த இரா. கருணாகரன் பரிசு ஒன்று அனுப்பி வைப்பார்.

22/11/91

அன்புடன் சஞ்சீவி,
மாமாக்களுக்கு,
உங்கள் கதைக்கு எனது பதில்.
புலவன் எலியின் வாலை பிடித்துதூக்கி நிலத்தில் ஒரே அடி. எலி சிதறுண்டு செத்துவிட்டது.
அரசன் புலவனின் வாலை தேடினான்; பிடித்து நிலத்தில் அடிப்பதற்கு, புலவனுக்கு வாலைக் காணவில்லை. புலவன் உயிர் தப்பினான்.

இப்படிக்கு,
அன்புடன்,
ச.சத்தியா.
TØLLØSE

20-11-91.

அன்புள்ள இரா. கருணாகரன் அவர்களுக்கு; நீங்கள் சிறுவர்மலரில் (உங்கள் நிறைமதிக்கு) கேட்டிருந்த கேள்வி மிகவும் கஷ்டமாக இருந்தாலும், நான் பலதடவை யோசித்து சில விடைகளை கண்டுபிடித்திருக்கிறேன். ஆனால் பதில் ஒன்றல்ல இரு முறைகளில் கூறலாம் என நினைக்கிறேன்.

A. புலவன் அந்த எலியின் வாலைப் பிடித்து நாலைந்து முறை நிலத்தில் அடித்து அகோரமாக கொன்று இருக்கலாம்.
(PS. மனிதனுக்கு வால் இல்லை )

B. புலவன் அந்த எலியை ஒரு பூனையிடம் கொடுக்க, அது ஒரு வேளை சாப்பாட்டைச் சந்தோசமாக சாப்பிட்டிருக்கும்.
(PS. பூனை மனிதனை தின்று பழக்கமில்லை )

இந்த இரண்டு விடைகளும் தான் எனக்கு கிடைத்தது என்னுடைய மூளைக்கு வேலை கொடுத்து பார்க்கும் போது.

இப்படிக்கு
சி. உதயன்.
Holstebro.

புலவர் அரச சபையில் ஒரு பூனையைக் கொண்டு செல்ல வேண்டும். பூனை எலியைப் பாய்ந்து கொல்ல, அரசன் பூனையைக் கொல்லுவான். எலியைக் கொன்றவனை, அரசன் எண்ணியபடி கொல்லும் போது பூனை கொல்லப்பட்டு புலவர் உயிர் தப்புவார். இதனால் புலவரின் சமயோசித புத்தியைச் சபையோர் பாராட்டுவார்கள்.

Rohini.

"உங்கள் திறமைக்கு" என்ற பகுதியில் பரிசில்கள் பெறும் நேயர்களுக்கு காலக்கிரமத்தில் "சஞ்சிகை" பரிசில்களை அனுப்பிவைக்கும்.

இந்தப் பரிசில்களை: இரா. கருணாகரன் (FARUM), கு. மிலிந்திரன் எ. ரோஸ்குமார் (HOLSTEBRO) ஆகியோர் மகிழ்ச்சியுடன் வழங்குகின்றனர்.

## நொடிகள்:

1. அந்தரத்தில் ஆட்டம் அஞ்சாறு பேர் வந்தால் ஓட்டம். அது என்ன?
2. அரக்கனுடை தலை அந்தரத்தில் தொங்குது பார். அது என்ன?
3. அரிய தடி பெரியாத்தா, அவள் கெட்டிக்காரி பால் கொடுக்காமல் பிள்ளை வளர்ப்பாள். அவள் யார்?

வழங்கி உதவியவர்
எம். சந்திரசேகரம்
Struer.

விடைகள்:

1. மழை
2. திருஷ்டிப் பூசணிக்காய் (நீத்துப் பூசணிக்காய்)
3. கோழி

கீழேயுள்ள சொற்களுக்குப் பொருத்தமான ஒருமை, அல்லது பன்மைச் சொற்களை தெரிந்து எழுதிக் கொள்ளுங்கள்.


| **ஒருமை** | **பன்மை.** |
|---|---|
| [உ+ம்] நரி. | நரிகள். |
| கோழி. | ---------- |
| எலி. | ---------- |
| ---------- | பூனைகள். |
| ---------- | நாய்கள். |
| [உ+ம்] படம் | படங்கள் |
| புத்தகம் | --------- |
| வாகனம் | --------- |
| பாடம் | --------- |
| -------- | மரங்கள் |
| -------- | காகங்கள் |
| [உ+ம்] பசு | பசுக்கள் |
| பூ | ------- |

கீழேயுள்ள சொற்களுக்கு எதிர்க்கருத்துச் சொற்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| உ+ம்:- மகிழ்ச்சி | கவலை |
| வரவு. | ---------- |
| இன்பம். | ---------- |
| இரவு. | ---------- |
| வீரன். | ---------- |
| ஏழை. | ---------- |
| நல்லவன். | ---------- |
| மூடன். | ---------- |
| மென்மை. | ---------- |
| வெப்பம். | ---------- |
| நறுமணம் | ---------- |


[கோழை, பகல், அறிவாளி, துர்நாற்றம், பணக்காரன், செலவு, கெட்டவன், துன்பம், வன்மை, தண்மை]

குழந்தைகளே ஒரு ஒளியின் முன் நின்று ஒரு திரையிலோ அல்லது ஒரு சுவரிலோ நிழல் விழும்படியாக, படத்தில் இருப்பது போல் கைகளை அமைத்து இந்த உருவத்-தைக் கண்டு பிடியுங்கள்.



## நீங்களும் செய்து பாருங்கள்..

இங்குள்ள இலக்கங்களினை ஒழுங்குமுறையில் - தொட்டுச் செல்லும்படி கோடு கீறினால், அந்த - அழகிய படம் வெளிவரும்



"CHANCHIVE"
Postbox : 1205
7500 Holstebro
Danmark.